

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட மருத்துவ அணி சார்பில் புதுப்பட்டினம் ஊராட்சியில் உள்ள செயின்ட் மேரீஸ் உயர்நிலைப்பள்ளியில் கழக மருத்துவர் அணி மாநிலத் துணைச் செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி தலைமையில் நடந்த மருத்துவ முகாமை தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி தொடங்கி வைத்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.ராமசந்திரன், தஞ்சை து.செல்வம், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.செல்வக்குமார் கழக நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், மாவட்ட மருத்துவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளுவரின் புகழை பறைசாற்றும் வகையில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள் ஏராளம்!

## உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்ற மழலையர் - வாழ்த்தி அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெருமிதம்!

அரியலூர், மார்ச் 23-

அரியலூர் மாவட்டம் மேலப்பழூவூர் கோல்டன் கேட்ஸ் மழலையர் பள்ளியில் நடைபெற்ற திருக்குறள் முற்றோதால் விழா என்ற தலைப்பில் 133 குழந்தைகள் 133 நிமிடங்களில் 133 அதிகாரங்களில் உள்ள திருக்குறள்களை சொல்லி உலக சாதனைப் படைத்ததை முன்னிட்டு அந்த மழலைகளைப் பாராட்டும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில இலக்கிய அணி துணைத் தலைவருமான கவிச்சுடர்.கவிதைப்பித்தன் முன்னிலை வகித்தார்.

தமிழ்நாட்டில் 133 நிமிடங்களில், 133 மழலைகள் 1,330 குறள்களைச் சொன்னது இதுவே முதல்முறையாகும். இதனை உலக சாதனையாக அங்கீகரித்து சென்னையில் உள்ள விருக்ஷா புக் ஆப் வேர்ல்ட் ரெக்கார்ட் நிறுவனம் உலக சாதனைக்கான சான்றிதழையும் பட்டத்தையும் கேடயத்தையும் வழங்கியது. இந்த உலக சாதனை நிகழ்ச்சிக்கான சான்றிதழை தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மற்றும் கவிச்சுடர் கவிதைப் பித்தன் மாணவ மாணவிகளுக்கு வழங்கி வாழ்த்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

மனித சமுதாயத்திற்கு வாழும் வழியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துச் சொன்ன அறிவுப் பெட்டகம் திருவள்ளுவர். தமிழ்ச் சமுதாயத்தின் கலங்கரை விளக்கம் அவர். அவருக்கு இந்த மண்ணில் இதுவரை தோன்றியவர்களில் மிகப்பெரிய நன்றிக் கடன் செலுத்தியவர் கலைஞர் ஒருவர் மட்டுமே என்று சொன்னால் அது மிகையில்லை. இன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பல திட்டங்களை வழங்கி வருகின்றார்கள்.

1976ம் ஆண்டு சென்னை நுங்கம்பாக்கத்தில் அய்யன் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டம் என்னும் பெயரில் நினைவாலயம் ஒன்றை எழுப்பி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஒரு அற்புத சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

2000ம் ஆண்டில் 133 அடி உயரத்தில் கன்னியாகுமரியில் அரபிக்கடல், வங்காள விரிகுடா, இந்துமாக்கடல் என முக்கடல் சந்திக்குமிடத்தில் கடற்கரையை யொட்டியுள்ள ஒரு தீவு பகுதியில் அய்யன் திருவள்ளுவருக்கு சிலை ஒன்றை வானளாவிய உயரத்தில் நிறுத்தி உலகோர் பார்த்து வியக்கும் வகையில் தலைவர் தலைஞர் அவர்கள் நிர்மாணித்துள்ளார்.

ஒவ்வொரு குறளுக்கேற்ப சிறு சிறு கதைகளை சிறப்பாக சித்தரித்து அதற்கேற்ற ஓவியம் வரையச் செய்து அந்த குறளின் பொருளை படித்தவுடன் எளிதில் புரிந்து கொள்ள குறட்பாக்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் குறளோவியம் தீட்டியுள்ளார். அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில், 'குறளோவியம்' என்ற தலைப்பில், திருக்குறளுக்கு கலைஞர் எழுதியுள்ள விளக்க உரை எழுதியுள்ளார்.

இன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் ஆனதை முன்னிட்டு, அய்யன் வள்ளுவர் சிலையில் இருந்த, விவேகானந்தர் பாறைக்கு கண்ணாடி பாலம் அமைத்து கொடுத்துள்ளார்.

இன்று இந்த மழலைகள் மனதில் திருக்குறள் ஆழப்பதிந்துள்ளதைப் பார்க்கும் போது, தமிழின் பெருமையை, தொன்மையை, அருமையை, வளமையை யாராலும் ரசிக்காமல் இருக்க முடியாது.

இவ்வாறு பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் பிரகதா இராஜ்குமார், நெறியாளர் பிரியாநடராஜன், ஆசிரிய பெருமக்கள், பெற்றோர்கள், குழந்தை செல்வங்கள் பலரும் கலந்துகொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முதலமைச்சர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் கரூர் முரளி பேசினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ, குத்தாலம் பி.கல்யாணம், குத்தாலம் க.அன்பழகன், கே.ஜி.சீனிவாசன், மகா.அலெக்சாண்டர், எஸ்.செல்வமணி, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், கு.வைத்தியநாதன், மலர்விழிதிருமாவளவன், ம.சுப்பராயன், குண்டாமணி(எ) என்.செல்வராஜ், எஸ்.சுவாமிநாதன், நத்தம் வின் சென்ட், எஸ்.கென்னடி மற்றும் பலர் உள்ளனர்.

### ரூ.4.50 கோடியில் வையப்பமலை

# சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மலைப்பாதை பணி துவக்கம்!

## கே.எஸ்.மூர்த்தி, ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ, வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி.பங்கேற்பு!

நாமக்கல், மார்ச் 23-

வையப்பமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் ரூ.4 கோடியே 54 லட்ச ரூபாய் மதிப்பில் மலைப் பாதை அமைக்கும் பணிகளை கே.எஸ்.மூர்த்தி துவக்கி வைத்தார்.

நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரம் ஒன்றியம் வையப்பமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு மலைப்பாதை அமைத்லுக்கான பணி 2024 2025 நிதியாண்டின் எஸ் சி பி ஏ ஆர் திட்டத்தின் மூலம் ரூ. 4 கோடியே 54 லட்ச ரூபாய் மதிப்பில் மலைப் பாதை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டுப் நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினரும், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளருமான ஈ.ஆர்.ஈஸ்வரன்,

நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு மலைப்பாதை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தனர்.

தொடர்ந்து திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் வையப்ப மலையில் இருக்கிற முருகன் கோயிலுக்கு மலைப்பாதை சாலை அமைக்க வேண்டும் என 50 ஆண்டுகால கோரிக்கையாக இருந்து வந்தது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் படிகளின் வாயிலாக மேலே சென்று முருகனை தரிசிப்பதை வழக்கமாக வைத்திருந்திருந்தனர். இந்த கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடத்திலே எடுத்துச் சென்று இந்த அத்தியாவசியத்தை எடுத்துச் சொல்லி அதற்கான நிதியை பெற்று அதற்கான பணி துவங்கப்பட்டுள்ளது. மலைப்பாதை அமைக்கும் பணிக்கு உறுதுணையாக இருந்த இந்து அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு மற்றும் ஊரக உள்ளாட்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆகியோருக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். 800 மீட்டர் நீளம் கொண்ட இச்சாலை 5 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்டு, ரூ. 4 கோடியே 54 லட்சம் நிதியில் பணி துவங்க ப்பட்டுள்ளது. இதனால் மலையில் உள்ள முருகனை தரிசிப்பதற்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து வரக்கூடிய அந்த சூழ்நிலை உருவாக்கி கொடுத்திருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் எங்கள் அனைவரின் சார்பாக மனமார்ந்த நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# "தமிழ்நாடு போராடும் ; தமிழ்நாடு வெல்லும்" கண்டன பொதுக்கூட்டம்!

## கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி, சென்னை மதிவாணன், திப்பம்பட்டி ஆறுச்சாமி சிறப்புரை!

நாமக்கல், மார்ச் 23-

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து பொதுக் கூட்டம் சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி காலப்பநாயக்கன்பட்டியில் நடைபெற்றது.

கூட்டத்தில் சேந்தமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் அசோக் குமார் தலைமை தாங்கினார். சேந்தமங்கலம் பேரூர் கழக செயலாளர் என்.தனபாலன் வரவேற்றார். சட்டமன்ற உறுப்பினர்கள் சேந்தமங்கலம் கே.பொன்னு சாமி, நாமக்கல் பெ.ராமலிங்கம்ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், தலைமை கழக பேச்சாளர்கள் கழக செய்தி தொடர்பாளர் சென்னை மதிவாணன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் பேசுகையில், நமக்கு தாய்மொழி தமிழ் போதும். ஏற்கனவே ஒன்றிய அரசாங்கம் இந்தித் திணிப்பை செய்த போது அப்பொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகப் பெரிய போராட்டத்தை நடத்தி நாடாளுமன்றத்தில் பேசுகின்ற போது, எந்த காரணத்தை கொண்டும் இந்தியை திணிக்க மாட்டோம் இந்தித் பேசாத மக்கள் விரும்புவரை ஆங்கிலமும் அவர்களுடைய தாய்மொழி மண்டல மொழியின் பார்வையில் ரீஜனல் லாங்குவேஜ் தொடரும் என்று நேரு நாடாளுமன்றத்தில் வாக்குறுதி கொடுத்தார். விரும்புவர்கள் படிக்கட்டும் என்றார். ஆனால் தற்போதுள்ள மோடி அரசு கட்டாயம் இந்தி படித்தால் தான் தமிழ்நாட்டிற்கு பணம் தருவேன் என கூறியுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக செயல்பட்டு வருகிறார். இன்னைக்கும் சென்னையில தி.நகர்ல இந்தி பிரச்சார சபா இருக்குது அதில் விரும்பியவர்கள் ஹிந்தி படிக்கலாம். தேர்வு எழுதலாம். நாம் அதற்கெல்லாம் எதிர்பார்ப்பவர்கள் கிடையாது. தாய்மொழி தமிழை மத்திய அரசாங்கத்துடைய பாடத்திட்டத்தில் படிக்கணும் அதுதான் நம்முடைய எதிர்பார்ப்பு. ஒரு மொழியை அழித்துவிட்டு இன்னொரு மொழியை கொண்டுவரக் கூடாது. மகாராஷ்டிரா மாநிலத்தில் மராத்தி, குஜராத் மாநிலத்தில் குஜராத்தி மொழிகள் அழிக்கப்பட்டு இந்தி தான் அதிக அளவில் பழக்கத்தில் உள்ளது. அந்த நிலை நம் தமிழ்நாட்டிற்கு தமிழ் இனத்திற்கு வரக் கூடாது.

உத்தரப்பிரதேஷ் மாநில முதலமைச்சர் தமிழ் இனத்தை அழிக்கணும்னா தமிழ்மொழி அழிச்சா போதும் எனக்கூறி வருகிறார். ஒரு இனத்திற்கு அடையாளம் மொழி தான். மொழி இருந்தால் தான் இனத்தை நாம் அடையாளம் காண முடியும் அதனாலதான் இந்தியைத் திணிக்க கூடாது. இந்திப் படித்தால் தான் பணம் என்பது சொல்வதை தடுத்து நிறுத்துவதற்காக தான் இந்த கண்டன பொதுக்கூட்டம்.

முதலமைச்சர் பதவிக்கு வந்தவுடன் கடந்த தேர்தல் நேரத்தில் சொல்லிய அனைத்து உறுதிமொழிகளையும் நிறைவேற்றியுள்ளார். ஆட்சிக்கு வந்தவுடன் மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது, சேந்தமங்கலம் தொகுதியில் நடுக்கோம்பையில் இருந்து குடிநீருக்கு ஆறு கோடி ரூபாய் மதிப்பில் தனிபைப் லைன், சேந்தமங்கலம் பேரூராட்சிக்கு ஆறு கோடிக்கு .தனி குடிநீர் பைப் லைன், மகளிர் இலவச பஸ் பயணம், நகை கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவி குழு கடனை தள்ளுபடி செய்து மீண்டும் மகளிர் சுய உதவி குழுவிற்கு கடன், விவசாயி களுக்கு கடன், மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டம், காமராஜர், பேரறிஞர் அண்ணா, எம்ஜிஆருக்கு பிறகு ஏழை, எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் மக்கள், அவர்களுடைய குழந்தைகள் பசியோட பள்ளிக்கூடத்திற்கு போகக்கூடாது என்று இந்த இந்திய நாடே போற்றுகின்ற மகத்தான திட்டம் தான் காலை சிற்றுண்டி திட்டம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி உள்ளார். . கடந்த ஆட்சியில் 10 வருடமா அதிமுக ஆட்சியில் எடப்பாடி பழனிசாமி எந்த ஒரு புதிய திட்டத்தையும் கொண்டு வரவில்லை. கொடநாடு கொலை, கொள்ளை நடந்ததை நீங்க எல்லாம் மறந்திருக்க மாட்டீங்க. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணத்தில் இருக்கக்கூடிய மர்மம் போலீஸ் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். 2 நாளைக்கு முன்னாடி எடப்பாடி பழனிசாமியின் பாதுகாப்பு அதிகாரியை சிபிசிஐடி போலீஸ் விசாரித்து இருக்கிறது. கொட நாட்டில் காவலாளி ஓம் பகதூர் கொலை / ஜெயலலிதா டிரைவர் மர்மமான முறையில் கொலை ஜெயலலிதாவுடைய கம்ப்யூட்டர் ஆபரேட்டர் சயன் மற்றும் அவரது குழந்தை நீலி ஆகியோர் ஆத்தூர் பக்கத்தில் ஒரு சாலை விபத்தில் இறந்து போனார்கள். ஐந்து பேரை கொலை செய்த கொலைகார பாவிகள் மீண்டும் இந்த தமிழ் நாட்டை ஆளலாம்,, மீண்டும் கொள்ளை அடிக்கலாம் என்று எண்ணுகிறார்கள் தமிழ் நாட்டு மக்கள் யாரும் ஏமாந்தவர்கள் கிடையாது. இதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த தமிழ் இனத்திற்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் பாடுபடுகின்ற ஒரே முதலமைச்சர் நம்முடைய தளபதி முக ஸ்டாலின் தான். வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலில் உதயசூரியனுக்கு ஓட்டு போடுங்க. கட்டாயம் நம்முடைய இலக்கு 200க்கும் தாண்டி திராவிட முன்னேற்றக் கழகம் வெல்லும். மீண்டும் முதலமைச்சராக தளபதி மு.க.ஸ்டாலின் அரியணையில் அமர்வது யாராலும் தடுக்க முடியாது. இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி பேசினார்.

இக்கூட்டத்தில் துணை செயலாளர் ராணி பெரியண்ணன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி. இராமசுவாமி, பாலசுப்பிரமணியம், செந்தில் முருகன், நவலடி, பழனிவேல், பேரூர் கழக செயலாளர்கள் அன்பழகன், முருகேசன், செல்வராஜ், பழனியாண்டி, பொதுக்குழு உறுப்பினர்கள் காளியப்பன் விமலா சிவக்குமார், மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக சேந்த மங்கலம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜேஸ்வரன் நன்றி கூறினார்.





சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி பிறந்த நாள் விழா மற்றும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் ஒன்றிய செயலாளர் ஏ. விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம், தலைமை கழக பேச்சாளர் வரகூர் காமராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கொரடாச்சேரியில் தெருமுனைப் பிரச்சாரம்!

## சேகர் கலியபெருமாள் - சோம.இளங்கோவன்-விக்னேஷ்வரி பங்கேற்பு!

திருவாரூர், மார்ச் 23-

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கொரடாச்சேரி வடக்கு ஒன்றியப்பகுதிகளில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. ஒன்றிய கழக செயலாளர் சேகர் கலியபெருமாள் தலைமையில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் தலைமைக்கழக பேச்சாளர் சோம.இளங்கோவன், கழக இளம் பேச்சாளர் விக்னேஷ்வரி, தங்க குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்று பிரச்சார உரையாற்றினார்.

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு,திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், "தமிழ்நாடு போராடும் தமிழ் நாடு வெல்லும்" , துணை முதல்வர் உதயநிதி அவர்களின் பிறந்தநாள் விழா உள்ளிட்டவைகளை முன்னிறுத்தி அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களிலும் பிரச்சார கூட்டங்கள் நடைபெற்றுவருகிறது.

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கொரடாச்சேரி வடக்கு ஒன்றியப்பகுதிகளான காப்பனா மங்கலம் மற்றும் பவித்ரமாணிக்கம் ஆகிய இடங்களில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது.

ஒன்றிய கழக செயலாளர் சேகர் கலியபெருமாள் தலைமையில் நடைபெற்ற இந்த பிரச்சாரக்கூட்டத்தில் கொரடாச்சேரி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.பாலச்சந்திரன், எஸ்.பி.ஜே.தாமஸ், காசிராஜன், கோவி.சந்துரு, ஒன்றிய அமைப்பாளர் மதி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எண்கண் சா.மணி, துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், பாலமுத்து, சோமசுந்தரம், ஆசிரியர் தி.ப.செல்லத்துரை மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சி, கருகம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் நபார்டு வங்கி திட்டத்தின் கீழ் ரூ.2 கோடியே 12லட்சம் மதிப்பீட்டில் 9 வகுப்பு அறைகள் கொண்ட புதிய கூடுதல் கட்டிடம் கட்டும் பணியினை பேரூராட்சித் தலைவர் விநாயகா பழனிச்சாமி துவக்கி வைத்தார். இதில் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் குப்புசாமி, துணைத் தலைவர் ஆறுமுகம், வார்டு கவுன்சிலர்கள் பெரியசாமி, மேனகா, பாலசுப்பிரமணியம், வினோஜ் தயாளன், பிரியா செந்தில், துளசிமணி ஆறுமுகம், பேரூர் கழக முன்னாள் செயலாளர் இளங்கோ உள்பட பலர் கலந்து கொண்டனர் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கி. திராவிடமணி

மார்ச் 23 (2016)



தனது மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஓரத்தநாடு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திராவிட இயக்கத்தின்மீது கொண்ட பற்றின் காரணமாக மருதமுத்து என்ற தனது இயற்பெயரை பேரறிஞர் அண்ணா அவர்களால் திராவிடமணி என்று பெயர் மாற்றிக் கொண்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.